# இதர தகவல்கள்

தீர்வு / சேவையை பெற்றுக் கொள்வதற்கு பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள்

| | |
|---|---|
| **தகைமை** | • இலங்கை பிரஜையாக இருப்பதுடன் இலங்கையில் வசிப்பது<br>• 18 – 55 வயதுக்குட்பட்டவராக இருத்தல் |
| **தேவையான ஆவணங்கள்** | **சம்பளம் என்றால்**<br>• முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்<br>• தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப்பத்திர பிரதி<br>• அண்மைய சம்பள சிட்டை<br>• சம்பளம் மற்றும் தொழிலை உறுதி செய்து தொழில் வழங்குநரிடமிருந்து கடிதம்<br>• கட்டணப்பட்டியல் அத்தாட்சி (தொலைபேசி, நீர் அல்லது மின்சார கட்டணப்பட்டியல்)<br>• கடந்த 6 மாதங்களுக்கான சம்பளம் வைப்புச் செய்யப்படும் வங்கிக் கணக்கின் கூற்றுகள் (தேவையாயின்) |
| | **சுயதொழிலில் ஈடுபட்டிருப்பின்:**<br>• முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்<br>• தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப்பத்திர பிரதி<br>• வியாபார பதிவு சான்றிதழ்/ஸ்தாபிப்பு சான்றிதழ்<br>• கடந்த 6 மாதங்களுக்கான தனிப்பட்ட நடைமுறைக் கணக்கு கூற்றுகள் |
| | சொத்தை அடைமானமாகக் கொண்ட கடன்களுக்கு, சொத்து தொடர்பான மேலதிக ஆவணங்கள் தேவைப்படும்.<br>கடன் மதிப்பாய்வுக்கு தேவையாயின் அவசியமான மேலதிக ஆவணங்களை வங்கி கோரும்.<br>கடன் உடன்படிக்கையின் நியதி மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய எழுத்துமூல உடன்படிக்கையில் வங்கியுடன் வாடிக்கையாளர் கைச்சாத்திட வேண்டும். |
| **எவ்வாறு விண்ணப்பிப்பது** | உங்கள் இல்லத்துக்கு அருகாமையிலுள்ள SDB வங்கியுடன் தொடர்பு கொள்ளவும் |

முக்கிய நியதிகள்

| | |
|---|---|
| **கடன் காலம்** | கடன் ஒப்பந்தத்துக்காக மீளச் செலுத்த அனுமதிக்கப்படும் காலப்பகுதி கடனின் முழுமையான காலப்பகுதியாகும். வாடிக்கையாளரின் தகைமை மற்றும் தீர்வின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் கடனின் முழுமையான காலப்பகுதியை தீர்மானிக்க முடியும். |
| **கடன் கணக்கு** | கடன் ஒப்பந்தம் பேணப்படும் கடன் கணக்கு இலக்கமாகும். |
| **கடன் மீளச்செலுத்தும் கணக்கு** | சேமிப்புக் கணக்காக இருப்பதுடன், மீளச் செலுத்துவதற்கு உடன்பட்ட நிலுவைத் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக கணக்கில் போதியளவு மீதி பேணப்பட வேண்டும். |
| **வங்கியின் தீர்மானம்** | கடன் அனுமதி என்பது வங்கியின் கடன் கொள்கையின் பிரகாரம் அமைந்திருப்பதுடன், அவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்வதில் வங்கி ஏக அதிகாரத்தை கொண்டிருக்கும். |
| **கடன் சேவை விகிதம்** | வாடிக்கையாளரின் மாதாந்த மொத்த கடன் கடப்பாடுகள் எதிர் தேறிய வருமானம் என்பதை குறிப்பதுடன், சதவீதத்தில் காண்பிக்கப்படும். வாடிக்கையாளரின் கடன் மீளச் செலுத்தும் உடனடி ஆற்றலை உறுதி செய்வதற்காக சர்வதேச ரீதியில் பின்பற்றப்படும் குறிகாட்டியாக அமைந்துள்ளது. வங்கிக்கு அப்பால் ஏதேனும் புதிய கடன்களை பெற்றுக் கொள்வதற்கு முன்னதாக அது தொடர்பில் வங்கிக்கு வாடிக்கையாளர் அறிவிக்க வேண்டும் என்பதுடன், இந்த ஒப்பந்தத்தை ஏதேனும் வகையில் மீறியிருந்தால், வங்கியின் தீர்மானத்தின் பிரகாரம் வழங்கி கடனை மீளப் பெற அல்லது இரத்துச் செய்வதற்கான அதிகாரம் வழங்கப்படும். |
| **பெறுமதிக்கான கடன்** | பிணையாக வைக்கப்பட்டதன் பெறுமதிக்கும் அனுமதியளிக்கப்பட்ட கடன் தொகைக்குமான விகிதத்தை இது குறிக்கின்றது. |
| **கடன் திரட்டு** | பல்வேறு கடன் வசதிகளை ஒற்றை தனி வசதியாக இணைக்கும் செயன்முறையாகும். பிரிதொரு நிறுனத்தில் காணப்படும் ஏதேனும் கடனை வாடிக்கையாளர் செலுத்தித்தீர்க்க தீர்மானித்தால், சம்பந்தப்பட்ட செலுத்தித் தீர்ப்பு ஆவணங்களை வங்கிக்கு கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்க தவறும்பட்சத்தில், செலுத்துகையில் ஏற்படும் தாமதங்களால் மேலதிக வட்டிக் கட்டணங்களை வாடிக்கையாளருக்கு ஏற்க வேண்டியிருக்கும். |
| **ஒற்றைப்பட்ட நாட்களுக்கான வட்டி** | முதலாவது மீளச்செலுத்தல் தவணை, கடன் வழங்கிய திகதியிலிருந்து 1 மாதத்துக்குள் வருமாயின், வட்டி மாத்திரம் அறவிடப்படும். அடுத்த தவணை நிலுவைத் திகதியிலிருந்து முதலாவது முழுமையான தவணை அறவிடப்படும். |
| **வசதியை மீளாய்வு செய்தல்** | கடன் வசதியை மீளப்பெறல்.־.இரத்துச் செய்தல் அல்லது ஒப்பந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றம் செய்தல் தொடர்பாக சொந்த தீர்மானத்தின் அடிப்படையில், வாடிக்கையாளருக்கு எவ்விதமான முன்னறிவித்தலுமின்றி மீளாய்வை வங்கி மேற்கொள்ளும். |
| **கடன் வசதியை ஏற்றுக் கொள்ளல்** | கடன் வழங்கப்பட்டதன் பின்னர் வாடிக்கையாளர் வட்டி வீதம் அல்லது இதர ஏதேனும் நிபந்தனைக்கு வாடிக்கையாளர் உடன்படாவிடின், அது பற்றி வாடிக்கையாளர் முறையாக (7 நாட்களுக்கு மேற்படாமல்) வங்கிக்கு, கடனை பெற்றுக் கொள்ள முடியாமை தொடர்பில் அறிவிக்க வேண்டும் என்பதுடன், கடன் தொகையை பயன்படுத்தக்கூடாது. |
| **வசூலிப்புகள்** | நிலுவைத் திகதியன்று, மீளச்செலுத்தும் கணக்கில் போதியளவு மீதி காணப்படாவிடின், கடன் நிலுவை நிலையை எய்தும் என்பதுடன் நெறிதவறிய கணக்காக அறிக்கையிடப்படும். நெறிதவறிய முதல் 3 மாத காலப்பகுதியினுள் கொடுப்பனவை நினைவூட்டி கடிதங்கள், அழைப்புகள் மற்றும் குறுந்தகவல்கள் மற்றும் அவசியமான வாடிக்கையாளர் விஜயங்கள் போன்றன மேற்கொள்ளப்படும். வாடிக்கையாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்த முடியாவிடின், பிரேரித்தவர்களை வங்கி தொடர்பு கொள்ளும். நெறிதவறிய நிலை நான்காம் மாதத்துக்கும் தொடருமாயின், நிலுவையிலுள்ள தொகையை மீட்பதற்கு மூன்றாம் தரப்பு வசூலிப்பு முகவர்களை வங்கி நியமிக்கும் என்பதுடன், அதற்கான செலவுகளும் வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்படும். வங்கியில் பேணப்படும் சேமிப்பு கணக்குகள் அல்லது நிலையான வைப்பு கணக்குகளில் காணப்படும் மீதியிலிருந்து செலுத்தப்பட வேண்டிய சகல தொகைகளையும் அறவிடுவதற்கு அல்லது மேலதிகப் பற்றை உருவாக்குவது அல்லது ஏற்கனவே காணப்படும் மேலதிகப் பற்று எல்லையை அதிகரிப்பதையும் வாடிக்கையாளருக்கு எவ்விதமான அறிவித்தல்களையும் வழங்காமல் மேற்கொள்ளும் அதிகாரத்தை வங்கி கொண்டுள்ளது. |